PUTHIYA THALAIMURAI FOUNDATION

(A People-based movement working for Youth Development and Rural Education - One of the Largest NGOs in India)

ISRB EXPO FORUM™

Indian Small & Rural Business Exposition Forum

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

(A National Initiative to Promote Small & Rural Businesses)

JSS ACADEMY OF HIGHER EDUCATION & RESEARCH

(DEEMED TO BE UNIVERSITY)

JSS COLLEGE OF PHARMACY, THE NILGIRIS

*A Report on*

## National Workshop Series on Micro Entrepreneurship for Youth - 3rd Edition

# Seminar on Export Business Opportunities

ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

March 5 & 6 2022 | Time: 10.00 a.m. to 5.30 p.m.

JSS College of Pharmacy, Rocklands, Ooty, The Nilgiris







"ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முன் அந்த நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், அரசியல் சூழ்நிலை போன்ற தகவல்களை முதலில் சேகரிக்க வேண்டும். அதனடிப்படையில் தொழிலை தொடங்க வேண்டும் அப்பொழுது தான் ஏற்றுமதி தொழிலில் வெற்றி பெற முடியும்"







பார்வையாளர்கள் பதிவு செய்யும் காட்சி

மேடையிலே சிறப்பு விருந்தினர்கள் வீற்றிருந்த காட்சி

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் மற்றும் JSS College of Pharmacy, நீலகிரி இணைந்து ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம் மார்ச், 5 & 6, 2022 ஆகிய 2 நாட்கள் நீலகீரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள JSS College of Pharmacy, இல் நடைபெற்றது. முதல் நிகழ்வாக ச.சுரேஷ் கண்ணன், General Manager - Projects பேசுகையில், நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து அதனைத் தொடர்ந்து கிராமப்புறக் கல்வி திட்டம், ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றத்தின் சுயதொழில் நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள், கல்லூரி மாணவர்களுக்கான சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டு மன்றத்தின் பணிகள் குறித்தும்விரிவாக எடுத்துரைத்தார். புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் எஸ்.இளமாறன், Sr. Head - Projects மற்றும் கே.விஜயகோபால், Head Projects & Admin ஆகியோர் இந்த இரண்டு நாள் கருத்தரங்கத்தினை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினார்கள்.



திரு. P.சண்முகசிவா



திரு. B. கார்த்திகைவாசன்



முனைவர். எஸ்.பி. தனபால்

பின்னர் சிறப்பு விருந்தினர் **திரு. P. சண்முகசிவா, பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், நீலகிரி மாவட்டம்** பேசுகையில் நீங்கள் ஏற்றுமதியாளராக வேண்டுமானால் முதலில் என்ன பொருளை தேர்வு செய்ய வேண்டும், பின்னர் அந்த பொருள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது என்பது போன்ற தகவல்களை சேகரிக்க வேண்டும் என்றும் கூறினார். உங்களைப் போன்ற தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு நலதிட்டங்கள் மாவட்ட தொழில் மையத்தில் இருக்கிறது. அத்திட்டங்கள் மூலம் உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகையில் நீங்கள் தொழில் திட்ட அறிக்கையுடன் எங்களை அணுகினால் நாங்கள் உங்களை வழிநடத்தி தொழில் தொடங்குவதற்கான அனைத்து உதவிகளையும் செய்து தருகிறோம் என்றும் ஊக்கமளித்தார்.

தொடர்ந்து **திரு. B. கார்த்திகைவாசன், பொது மேலாளர், / துணை இயக்குநர், மாவட்ட தொழில் மையம், கோயம்புத்தூர்** அவர்கள் பேசுகையில் இன்றைய காலகட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் பணிகள் குறித்த போதிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. தற்போதைய அரசு மக்களிடையே அந்த விழிப்புணர்வை விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புதிய தலைமுறை அறக்கட்டளை இதுபோன்ற பல தொழில் கருத்தரங்கங்களை நடத்தி மாவட்ட தொழில் மையம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழில் மையத்தின் பணிகள், திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

JSS College of Pharmacy, **முதல்வர், முனைவர். எஸ்.பி. தனபால்** பேசுகையில் 2018 ஆம் ஆண்டில் இதே கல்லூரியில் புதிய தலைமுறை அறக்கட்டளை ஏற்றுமதி கருத்தரங்கத்தினை சிறப்பாக எல்லோரும் போற்றும் வகையில் நடத்தினார்கள். அதன் அடிப்படையில் இரண்டாவது முறையாக இக்கருத்தரங்த்தினை இங்கே நடத்துவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் கூறினார். மேலும் பேசுகையில் அறக்கட்டளையின் சிறப்பான பணிகள் தொடர தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.



பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் - ஏற்றுமதிக்கு நாடுகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கிய காட்சி

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் திரு. எஸ். சிவராமன், Advocate, Consultant & Trainer,. Export - Import / Customs / MSME Chennai அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புகள் பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் முறைகள், ஏற்றுமதி செய்வதற்கு என்ன என்ன பொருட்கள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள https://exportpotential.intracen.org/ என்ற இணையதளத்தின் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.



சான்றிதழ் மற்றும் ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ மன்ற உறுப்பினர் அட்டை வழங்கிய காட்சி

ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முதலில் பொருளை தேர்ந்து எடுக்க வேண்டும், சிறிய அளவில் ஏற்றுமதி தொழிலை தொடங்கி மெதுவாக விரிவுபடுத்த வேண்டும் என்று கூறினார். பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் வழிமுறைகள், பொருட்களுக்கு காப்பீடு செய்யும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். இறக்குமதியாளரை அடையாளும் காணும் வழிமுறைகள், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் அதிகம் உள்ள நாடுகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் பொருட்களை வெளிநாடுகளுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைக்கும் வழிமுறைகள் குறித்தும் விரிவான தகவல்களை எடுத்துரைத்தார். ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முன் அந்த நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், அரசியல் சூழ்நிலை போன்ற தகவல்களை முதலில் சேகரிக்க வேண்டும். அதனடிப்படையில் தொழிலை தொடங்க வேண்டும் அப்பொழுது தான் ஏற்றமதி தொழிலில் வெற்றி பெற முடியும் என்று கூறினார்.



டாக்டர். லீனஸ் ஜேசு மார்ட்டின் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

இரண்டாம் நாள் நிகழ்வில் **டாக்டர். லீனஸ் ஜேசு மார்ட்டின்,** Director - Campus Life, SRM Institute of Science and Technology, Potheri, Chengalpattu அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுவதில் புதிய தலைமுறை அறக்கட்டளை மிகச்சிறப்பாக தனது பணியைச் செய்து வருகிறது. கிராமப்புறக் கல்வி, விழுதுகள் உயர்கல்வி திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழிகாட்டுதல், மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு தளங்களில் அறக்கட்டளை பயணம் செய்து வருகிறது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட நீங்கள் அனைவரும் விரைவில் தொழில் முனைவோராக முன்னேற்றம் வேண்டும் என்று கூறி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

மேலும் பல்வேறு இணையதளங்கள் –ஏற்றுமதி & இறக்குமதி குறித்த சர்வதேச வர்த்தகத் தகவல்கள் / புள்ளிவிவரங்களை www.trademap.org, www.commerce.gov.in, போன்ற இணையதளங்களின் மூலம் தெரிந்து கொள்வது எப்படி என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் பல்வேறு ஏற்றுமதி தொடர்பான இணையதளங்கள் www.eximmitra.in, www.dgft.gov.in, www.fieo.org, www.cogoport.com, போன்றவற்றில் உள தகவல்க குறித்தும் கூறினார். ஒரு நாட்டிற்கான தாய் மொழியில் பத்து முதல் பதினைந்து வார்த்தைகளை தெரிந்து கொண்டால் துணிச்சலாக எந்த ஒரு நாட்டுடனும் வியாபாரம் செய்யலாம். நிறைய தொழில் கண்காட்சிகளில் கலந்து கொள்ள வேண்டும், அதன் மூலம் மட்டுமே பொருட்கள், நாடுகள் பல்வேறு வியாபார நுணக்கங்கள், பல்வேறு நாட்டு வியாபாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஏற்றுமதி தொழிலை வெற்றிகரமாக தொடங்க முடியும் என்பனபோன்ற பல்வேறு தகவல்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

## இந்த இரண்டு நாள் கருத்தரங்கில்

1. Company Registration 2. How to choose the Product ? 3. How to choose the Country ?
4. Export Procedures 5. Export Products Pricing Method 6. How to Get Orders
7. Banking Process 8. Shipment Process 9. Export Market Research & Assistance Companies

மேலே குறிப்பிட்டுள்ள தலைப்புகளில் அனைத்து தகவல்களையும் பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் தெளிவாக விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊட்டி அரசுக் கலைக்கல்லூரியைச் சேர்ந்த B.Com இறுதி ஆண்டு படிக்கும் மாணவி **நான்சி கிரிஸ்டினா** கூறுகையில் தான் கலந்து கொள்ளும் முதல் தொழில் சார்ந்த கருத்தரங்கம் இது தான் என்றும் ஏற்றுமதி தொழில் குறித்து எதுவும் தெரியாத நிலையில் கலந்து கொண்ட எனக்கு இக்கருத்தரங்கத்தின் மூலம் ஏற்றுமதி தொழில் குறித்து – நிறுவனம் பதிவு செய்யும் முறைகள் IE Code எடுக்கும் வழிமுறைகள், பொருட்களை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் என அனைத்து தகவல்களையும் தெரிந்து கொண்டேன். பயிற்சியாளர் திரு. சிவராமன் மிகத்தெளிவாக அனைவரும் எளிதில் புரிந்து கொள் ளும் வகையில் பொறுமையாக எங்கள் அனைவரின் கேள் விகளுக்கு பதில் அளித்த விதம் மிகச்சிறப்பு, இக்கருத்தரங்கம் மூலம்எனது படிப்பை முடித்தவுடன் ஏற்றுமதி தொழிலை தொடங்க வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார். திருப்பூரைச் சேர்ந்த **முருகவேல்** கூறுகையில் இது போன்ற கருத்தரங்கத்தினை ஏற்பாடு செய்த புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டதன் மூலம் ஏற்றுமதிக்கு பொருட்களை தேர்ந்தெடுப்பது குறித்து ஒரு தெளிவான வழிகாட்டுதல் கிடைப்பெற்றேன், மேலும் இறக்குமதியாளரை நாமே இணையதளம் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் எடுத்துரைத்தார்கஷீமீ. பல்வேறு இணைதளங்களை பயன்படுத்தி ஏற்றுமதி துறையில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை அனைவருக்கும் ஏற்ப்படுத்திய அறக்கட்டளை தொடர்ந்து இதுபோன்ற கருத்தரங்கங்களை அனைத்து மாவட்டங்களிலும் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கருத்தரங்கில் நீலகிரி, ஈரோடு, சேலம், தூத்துக்குடி, திருப்பூர், திருவாரூர் தஞ்சாவூர், சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, மதுரை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் இருந்து 70க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் (6.03.2022) மாலை 4.30 மணியளவில் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## இரண்டு நாள் கருத்தரங்கத்தின் சில புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு








புதிய தலைமுறை அறக்கட்டளை
எண்: 24, ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017 | மொபைல்: 8754417500 / 308 / 338|
இமெயில்: contact@ptfindia.org | வலைதளம்: www.ptfindia.org, www.isrbexpo.org